தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 13 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 6-7-57 | சனிக்கிழமை | இதழ் 2

எஸ். ஏ. பி.

இந்தச் சித்திரம்

தமிழ்ச் சமுதாயத்தின் ஒரு பகுதியான ஆயுதந் தாங்கிய போலீசாரின் வாழ்க்கை முறைகள் பற்றி வாசகர்களில் பெரும்பாலோர் தெரிந்திருக்க முடியாது. மற்றக் கட்சிகளை அடக்குவதற்கும் ஒடுக்குவதற்கும் அரசாங்கத்தினருக்குப் பயன்படுகின்ற இந்தப் படையினரின் வாழ்வு ஒரு சோக காவியமாகும். இவர்களுக்கு ஒருநாள் கூட நிம்மதி இல்லை. நல்ல உணவு இல்லை. மனைவி மக்களோடு வாழ உரிமை இல்லை. தாங்கள் மனிதர்கள் என்பதை இவர்கள் நினைவு கூர்தற்குக் கூட அதிகாரிகள் நேரம் தருவதில்லை. போலீஸ் வேன் என்று சொல்லப்படும் நில வாகனத்தில் ஆடு மாடுகள் போல் இவர்கள் அடைந்து செல்வதைமட்டுமே நீங்கள் பார்க்கிறீர்கள். இவர்களின் இதயங்களை உங்களால் பார்க்க முடிந்தால் அவற்றிற்கு 'துன்பக் கேணிகள்' என்று பெயர் தருவீர்கள்!

இந்தச் சித்திரம் அவர்கள் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது. இதில் வரும் பாத்திரங்களின் பெயர்கள் அனைத்தும் கற்பனையே! ஆனால், நிகழ்ச்சிகள் பெரும்பாலும் உண்மை! இந்தப் படையிலிருப்போரில் நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டு பேர் இராமனுதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். ஆந்திரர்களும் இதில் இருக்கிறார்கள். மலையாளிகள் கூட இணைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும் அளவு கடந்த தொல்லைகள் இதில் இருக்கும் தமிழர்களுக்குத்தான். தமிழ்ப் பண்பாட்டில் வளர்ந்த இவர்கள், பல ஆண்டுகள் தமது மனைவியரைச் சந்திக்க முடியாத காரணத்தால் பரிதாபத்திற்குரிய அந்த மனைவியரில் சிலர் விபச்சாரிகளாகிவிட்டார்கள் என்கிற ஒன்றே போதும், இவர்கள் துயரம் எவ்வளவு ஆழமானது என்பதை அறிந்து கொள்ள! கதை மாதிரி வரும் இந்தச் சித்திரம் உண்மையில் நடந்தவைகளையே கூறுகிறது.

[ஆ-ர்]

1

அடுப்பிலிருந்த கீரையை கலவடையில் இறக்கி வைத்துவிட்டு கையிலிருந்த கரியைத் துடைத்தாள் அஞ்சலை. பாதி எரிந்தும் பாதி எரியாமலுமிருந்த சுள்ளிகளைக் கீழே எடுத்துப் போட்டுத் தண்ணீரை ஊற்றினாள். வாய் உடைந்திருந்த சோற்றுப்பானைக்குள் மெதுவாகக் கையை விட்டுப் பார்த்தாள். 'போதும்' என்று அவள் வாய் முணு முணுத்தது. முந்தானியைச் சுற்றிக் கட்டிக் கொண்டு, 'சின்னையா, சின்னையா' என்று குரல் கொடுத்தாள். கிழிந்த சில ரப்பர்துண்டுகள், உடைந்துபோன கோலிக் குண்டுகள், பழைய தகரங்கள் சகிதமாக 'என்னம்மா' என்று ஓடிவந்தான் அவளது நாலு வயதுப் பையன் சின்னையா.

"வா, சாப்பிட" - என்று கூறிய வண்ணம், அவன் கையிலிருந்த விளையாட்டுச் சாமான்களை மூலையில் வாங்கி வைத்துவிட்டு, தண்ணீர் ஊற்றி அவன் கை கால்களைக் கழுவினாள் அஞ்சலை. 'அப்பப்பா கொஞ்சநேரம் விளையாடுறதுக்குள்ளே எவ்வளவு அழுக்குடா கையிலே", என்று அலுத்துக்கொண்டு அவனை உட்கார வைத்துவிட்டுப் பானையிலிருந்த சோற்றைப் பக்கத்தில் எடுத்து வைத்தாள். பானையிலிருந்த தண்ணீரையே கொஞ்சம் ஊற்றினாள். இரண்டு உப்புக் கல் எடுத்துப்போட்டாள். கீரையைச் சட்டியோடு எடுத்து அவன் பக்கத்தில் வைத்தாள்.

"இன்னிக்கும் கீரைதானா அம்மா" என்று கலங்கிய குரலில் கேட்டான் சின்னையா. "இது அந்தக் கீரையில்லையடா! புதுக் கீரை! நல்லா இருக்கும். பக்கத்து வீட்டு பாப்பாயி நேத்துச் சாப்பிடல்லே? அதுதான் இது" என்று அவனைச் சமாதானப் படுத்திய வண்ணம் அகப்பையில் கீரையை எடுத்து, அவனது சோற்றுக்குப் பக்கத்திலேயே வைத்தாள். "எனக்கு வேண்டாம் போ! கறியே இல்லை!" என்று கூறிவிட்டு அழுது கொண்டே தரையில் படுத்தான் சின்னையா; அவன் தாடையைத் தொட்டுக் கெஞ்சி அவனைச் சாப்பிட வைப்பதற்குள் அவளுக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது. அம்மாவுக்காகச் சாப்பிடத் தொடங்கினான் சின்னையா. அந்தக் கீரையை ஒவ்வொரு வாய் அவன் அள்ளிப் போடும்போதும் அவன் முகம் சுருங்கியதை அஞ்சலை கண்டாள். அவள் இருதயமே வெடித்துவிடும் போலிருந்தது.

மஞ்சள் காம்பை மஞ்சள் கயிற்றில் கட்டி தாலியென்று கயிற்றிலே தொங்கவிட்டிருந்த அவள், பயனுக்கு ஒரு கத்தறிக்காயோ, உருளைக்கிழங்கோ வாங்குவதற்கு எங்கே போவாள்? அவள் கண்கள் அருவியாயிற்று. தன்னையறியாமல் விம்மி விம்மி அழுதாள். அழுவது அவளது தினசரிக் கடமைகளிலே ஒன்று. அன்றாடம் மனதில் எழும் துயரங்களைக் கண்ணீரில் கரைத்துவிட்டு நிம்மதி காண்பவள் அவள்.

கண்ணதாசன்

"ஏம்மா அழுறாய்! நான் கீரை சாப்பிடுவேம்மா! கீரை எனக்கு ரொம்பப் பிடிக்கும். இந்தக் கீரை ரொம்ப நல்லாயிருக்கு" என்றான் சின்னையா. தாயின் கண்ணீரைத் துடைக்க அந்த அறிவறியாப் பிஞ்சு இந்த மழலையை உதிர்த்தது. இது, மேலும் அவள் துயரத்தைப் பெருக்குவதற்குப் பயன்பட்டதே தவிர சமாதானப்படுத்துவதாக இல்லை. ஆனாலும் பிள்ளையின் பாச உணர்ச்சி தாயின் இதயத்திலே சூடான சுகத்தை உண்டாக்கிற்று. அப்படியே மகனைக் கட்டி ஒரு முத்தம் கொடுத்துவிட்டு, "இன்னும் ஒரு மாசத்திலே அப்பா வந்திருவாரு; நெறையப் பணம்; நெறையக் கோலி; சைக்கிளு; எல்லாம் கொண்டாருவாரு! வந்த ஒடனே ஒருநாளைக்கி முட்டை, ஒருநாளைக்கி கோழி; ஒருநாளைக்கி மீனு வாங்கி நா ஒனக்குச் சமச்சுத் தாரேன்" என்றாள் அஞ்சலை.

"அப்பாவுக்கு?" - பையன் கேட்டான்.

"ஓ! அவருக்குந்தான்! அவர் தானே பணம் கொண்டாராரு!"

"ஒனக்கு?"

"ஓ! எனக்குந்தான்!"

—பையன் திருப்தியாகவே சாப்பிட்டான். கை கழுவிக் கொண்டு 'நா வெளையாடப் போறேம்மா" என்றான்.

"போடா கண்ணு! சண்டை போட்டுக்காமெ வெளையாடு. சாயந்தரத்துக்குக் காபி தர்றேன்" என்றாள் அஞ்சலை.

ஆவாரம்பூ காபிக்கு என்ன பஞ்சமா? அஞ்சலையே அதில் தானே பிழைத்திருந்தாள்.

— 8-ம் பக்கம் —

12

அபிப் மெதுவாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் மிருகத்தனத்திற்குச் சவுக்கடி இருந்தது. அன்பிற்கும் மனிதாபிமானத்திற்கும் அன்பழைப்பு இருந்தது.

“அபீப், இப்போது என்ன சொல்கிருய்? மகமதியர்கள் அழியட்டும் என்கிருயா? அல்லாவின் செல்வங்கள் நிர்மூலமாகிப் போகட்டுமா?” தைமூரின் நெறித்த புருவமும் வேல் கொண்ட பார்வையும் அபீபை ஒரு கணம் அசத்திவிட்டன.

“இல்லை இல்லை! இந்த அடிமை இருக்கும்வரை, பாதுஷா எந்தக் கலவரத்திலும் ஈடுபடக்கூடாது. அதற்கு நான் ஒருபோதும் இசையமாட்டேன்.” என்று வாஞ்சையோடு கூறினுன் அபிப். அந்த வாஞ்சையில் புனிதத்துவமும் பூரணத்துவமும் வழிந்தோடுவதாகவே தைமூருக்குப் பட்டது.

“அபீப், என் உயிருக்கு ஆபத்து வந்துவிடும் என்று பயப்படுகிருயா? எனது ஜாதி, ஜனத்தின்முன் என் உயிர், எனக்குப் பெரிதென்று எண்ணியிருந்தால் நான் சக்கரவர்த்தியாகியிருக்க மாட்டேன். எங்கோ ஒரு தைமூருக்கு நான் சலாம் போட்டுக் கொண்டிருப்பேன். களத்திற்கு நான் போகக்கூடாது என்பதற்கு வேறு காரணம் இருந்தால் கூறு, கேட்கிறேன்; உன் கருத்துப்படி நடக்கிறேன்.” இவ்வாறு தைமூர் சொன்னபோது அவன் முகத்திலே பின்னிக்கிடந்த கோரம் மறைந்து சொண்டுவந்தது. களைகூடு கட்ட ஆரம்பித்தது.

“களத்திற்குத் தாங்கள் வர வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டால் தகவல் அனுப்புகிறேன்.” என்ருன் அபிப்.

அபீபின் பதில் தைமூருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தாலும், அந்த அதிர்ச்சி எதிர்பாராத நேரத்தில் முதுகிலே பனிக்கட்டி வைத்ததுபோல்தான் இருந்தது. முதலிலே துணுக்குற்று பின் முறுவல் பூத்தான் பாதுஷா.

“அபீப், நீ போவதும் நான் போவதும் ஒன்றுதானே. நான் போனுல் என் உயிர் என்னேடு வருகிறது. நீ போனுலும் என் உயிர் உன்னேடு களத்திற்கு வந்துவிடுகிறதே!” என்று போதை ததும்பச் சொன்னுன்.

அபிபால் இதற்குச் சமாதானம் கூறமுடியவில்லை. தரணிக்கே பூச்சாண்டியாக விளங்கும் ஒரு ஜீவன் தன்மீது வைத்திருக்கும் அபார நம்பிக்கையை எண்ணி அவன் உள்ளூர மகிழ்ந்தான். ஒருமுறை எச்சிலை விழுங்கிகொண்டான். அது அவனுக்கு அமுதாகப்பட்டது.

“பேசு அபிப்! நான் நிதானமாகத்தான் பேசுகிறேன்.... அபிப், பிறகு உன் இஷ்டம்! ஆனல் அடிக்கடி எனக்குத் தகவல் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் நான் ஓடிவந்துவிடுவேன்” என்று அபிபுக்கு இஸ்தகார் பிராந்தியத்திற்குப் போக அனுமதி கொடுத்தான்.

இந்தச் செய்தி சாமர்கண்டு முழுதும் பரவியது. பாதுஷாவின் அன்பைப் பெற்றவன் என்பதற்காக அபிபிடம் இருந்த அச்சத்தை, அவனுடைய இஸ்தகார் பயணம் செல்வாக்காக்கிவிட்டது. காரண காரியமில்லாத பயம், உண்மையான செல்வாக்காகும் போதுதான் மனிதனின் நேர்மையை எடைபோட்டுப் பார்க்க முடிகிறது. பாம்பென்று அஞ்சி ஒதுங்கியவர்கள், புழுவென்று கொஞ்சத் தலைப்பட்டனர்.

மறுநாள் காலை-ஞாயிறு கிளம்பு முன் சாமர்கண்டின் பிரஜைகள் அபீபை வழியனுப்புவதற்குத்திரண்டிருந்தார்கள். அல்லாவை எண்ணி அவர்கள் அனைவரும் ஏகோபித்து எழுப்பிய வாழ்த்து முழக்கம் அபிபை பூரிப்பில் ஆழ்த்திவிட்டது. தைமூர் தானே முன்நின்று அபிபின் பிரயாணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தான். மலைப்பிரதேசத்தில் கிடைக்காத பொருள்களையெல்லாம் சேகரித்துக் கொடுத்தான். குமரிப்பருவம் வரை கிளிபோல் வளர்த்த பெண்ணை புருஷன் வீட்டுக்கு அனுப்பிவைக்கும் தாயைப்போல் தைமூர் கண்கலங்கி நின்ருன். மசூதியில் பிரார்த்தனை நடந்தது. மக்களெல்லாம் மறுமுறையும் வாழ்த்தொலி கிளப்பினர். சேனைகள் பின்தொடர, வெண்புரவி மீதமர்ந்து தங்கள் செல்வி இஸ்தகார் நோக்கி அணிவகுத்துச் சென்ற அற்புதக் காட்சியை யஜ்தானியும் சோபியாவும் உப்பரிகையில் நின்று பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் விழிகளில் வடிந்த கண்ணீர் துன்பக் கண்ணீரா ஆனந்தக் கண்ணீரா என்று அவர்களுக்கே தெரியவில்லை. பிள்ளை மனம் எதற்காக இருந்தாலும் பெற்ற மனம்?

★

இஸ்தகார் பிரதேசம் அர்மீனியக் கிறிஸ்துவர்கள் மலிந்த பகுதி.



முகமதியர்கள் தைமூரின் தைரியத்தில் முன்பு ஒரு முறை கிறிஸ்துவர்களைத் தோற்கடித்து விட்டார்கள். கிறிஸ்துவப்படையின் தன்னம்பிக்கையற்ற தன்மை, அவர்களின் வாடிக்கையான வீரத்தையும் தின்றுவிட்டது. எந்தத் தைமூர் முகமதியப் படைக்கு இதயஜோதியாக விளங்கினுனே, அதே தைமூர் கிறிஸ்துவப் படைக்கு இருளரக்கனுகப் பட்டான். அதன் விளைவு, வீரமிருந்தும் கிறிஸ்துவப் படை தோல்வி கண்டது.

உலக சரித்திரத்தில் மிகப் பெரிய சேனுதிபதிகள்கூட, புஜபலமிருந்தும் இனம் தெரியாத பீதியினுல் பின்வாங்கியிருக்கிருர்கள்; அதனுல் உலகத்தின் போக்கே மாறியிருக்கிறது. மனேதிடம்தான் புஜபலத்தை இயக்குகிறது; அது இல்லாத புஜபலம் பயனற்றது என்பது புரியாததால் விளைந்தவிளைவுகளில் மிகவும் சோகமான கதை இஸ்தகாரில் கிறிஸ்துவர்கள் வீழ்ச்சியடைந்த கதை. ஆனல் காலம் நிலையாகவா இருக்கிறது. வெற்றி கண்ட முகமதியர்கள் நாளடைவில் கிறிஸ்துவர்களுக்கு ஜஜ்யா வரியை விதித்தார்கள். கிறிஸ்துவர்கள் மாதாகோயிலில் மணியடிக்கக் கூடாதென்ருர்கள். பாவமென்று கருதிய மதுபானத்தை முகமதியர்கள் தடுத்துவிட்டார்கள். இதைக் கிறிஸ்துவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். முகமதிய அதிகாரிகள் ஆயுதபலம் கொண்டு அவர்களைத் தாக்கினுர்கள். ஆனுலும் கிறிஸ்துவர்கள் சளைக்கவில்லை. முகமதியர்கள் வீரத்தை நம்பியதுபோல் கிறிஸ்துவர்களும் வீரத்தை நம்பத்தான் செய்தார்கள். வேதப் புத்தகங்களை புரட்டிப் பார்ப்பதிலேகூட ஒருவருக்கொருவர் பின்வாங்கவில்லை. ஆனுலும், முகமதியச் சுபேதார் கைது செய்யப்பட்டு விட்டான். முகமதியர்கள் எதிர்பாராத வகையில் கோட்டையிலே கிறிஸ்துவக் கொடி பறந்தது. வெற்றி கிறிஸ்துவர்களுக்குத்தான், பைபிளுக்குத்தான் என்ற நிலை பிறந்த போதுதான் அபீப் பெரும் படையுடன் இஸ்தகார் மண்ணில் அடியெடுத்து வைத்தான்.

அபிப் அங்கே முகாமடித்து இரண்டு நாட்களாகி விட்டன. அவன் இஸ்தகார் பிராந்தியத்து மதச்சிக்கலை தீர்த்துவிட படாத பாடு பட்டான். முகமதியர்களைப் பாதுகாக்க அனுப்பப்பட்ட பாதுஷாவின் படைத்தலைவன் தர்ம உபதேசம் புரிகிருனே என்று முகமதியக் கிழவர்கள் தாடியைத் தடவினுர்கள். இது துரோகம் என்று பல்லைக் கடித்துக்கொண்டு சொன்னுர்கள். ஆனல் அபீப், முகமதியர்கள்பேரிலேயே தவறு இருப்பதாகக் கருதினுன். முகமதியர்கள், கிறிஸ்துவர்களுக்கு விதித்த விதிகள் தகாதது என்று முடிவாக அவன் தீர்மானித்திருந்தான். தனக்குத்தானே சிந்திக்க ஆரம்பித்தான்.

“நாம் நினைப்பது சரியென்று தைமூர் ஒப்புக்கொள்ள வேண்டுமே! இதுமத விஷயமாயிற்றே! தைமூர் சம்மதிக்கமாட்டார். அதற்காக கிறிஸ்துவர்களைத் தண்டிக்க முடியுமா? தைமூரின் படைத்தலைவன் என்பதற்காக தர்மத்தை எப்படி மறக்கமுடியும்? நீதியை எப்படி அலட்சியப்படுத்தமுடியும்? ஒரு போதும் நான் கிறிஸ்துவர்களை எதிர்த்துப் போரிடமாட்டேன். அமீர் என்னை எதிரி என்று நினைத்தாலும் கவலையில்லை” என்று அபீபின் இதயம் அலைமோதிக் கொண்டிருந்தது.

மறுநாள் காலை அபிப் ஒரு அறிக்கையை பிரகடனப்படுத்தினுன். தைமூரின் பேரிலேயே அதில் கிறிஸ்துவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த ஜஜியா வரி நீக்கப்பட்டுவிட்டதாக அபிப் குறிப்பிட்டிருந்தான்.

நகரம் கொதித்தெழுந்தது. முகமதியர்கள் ஆவேசம் கொண்டு விட்டார்கள். “துரோகி! துரோகி!! அமீர் ரத்தத்தைக் கொட்டி வளர்த்த இஸ்லாமிய மதத்தை அவருடைய பிரதிநிதியே அழிப்பதா?” என்று எங்கும் எதிர் முழக்கம் ஒலிக்கத் தொடங்கியது. அபிபோடு வந்த முகமதியப் படை இஸ்தகார் முகமதியர்களோடு சேர்ந்துகொண்டது. அபிப் இப்போது தனியாளாக நின்று தவித்தான். தற்காப்புக்காக இஸ்தகார் கோட்டைக்குள் அவன் புகுந்துகொண்டான். இப்போது முகமதியப் படை வலிவு பெற்றுவிட்டது. கோட்டையை இடித்தார்கள். கொடிக்கம்பத்தை முறித்தார்கள். மாதாகோயில்கள் மடமடவெனச் சாய்ந்தன. நகரமே அதிர்ந்தது. இத்தனை கலவரங்களையும் கண்டுகூட அபிப் கலங்கவில்லை. கோட்டைக்குள்ளே இருந்து கொண்டு கிறிஸ்துவர்களை அமைதிப்படுத்திக்கொண்டிருந்தான். வேதப்புத்தகங்களின் பக்கம் கிடுகிடுவென மாறிக்கொண்டு போனது. ஜெபமாலையின் சுழற்சி அதிவேகமா இருந்தது. அதற்காக வெளியிலே கலவரம் ஓய்ந்துவிடுமா? டமாரம் அடிப்பதைப் போல் முகமதியப் படை கோட்டை வாசலை உடைத்துக் கொண்டுதானிருந்தது.

★

சாமர்கண்டு நகரத்தில் அரவம் ஒடுங்கியது. கள்ளிக்குருவியைப் போல் எந்த நேரமும் புலம்பிக் கொண்டிருக்கும் மசூதிக் காவலன் மட்டும் கவிபாடிக் கொண்டிருந்தான். பெரும்பாலும் அந்தக் கிழவன் தைமூரைப்பற்றித்தான் கவிபாடுவான். அவனுடைய கவிகளிலே பாதுஷாவின் கீர்த்திகளைத்தான் காணமுடியும். அன்றும் அவன் பாதுஷாவைப்பற்றியேதான் புகழ்ந்து பாடிக்கொண்டிருந்தான். இரண்டு நாட்களாக இஸ்தகார் பிராந்தியத்திலிருந்து எந்தவிதமான தகவலும் வராததால், விக்ரகம் இல்லாத கோயிலாய் — வெறுங்கூடாய் அமைதியிழந்து இருந்த தைமூருக்கு, மசூதிக்கிழவனின் புகழ்மாலை, தனக்கு மேற்பட்ட ஒரு பெருவீரன் அவனைத் தட்டிக் கொடுப்பதுபோலிருந்தது. இன்ப நிழல் படிந்த வீரநினைவுகள் அமீரின் முகத்திலே திருப்தியின் சாயலை உருவாக்கியது. மெள்ளச் சிரித்தான். மசூதிக் கிழவனின் முதுமைக் குரலில் இனிமையில்லாவிட்டாலும், நளினமில்லாவிட்டாலும், தைமூர், அந்தக் குரலை ரசிகனைப்போல் ரசித்துக்கொண்டிருந்தான். கிழவன் தன்னைப்பற்றி என்ன நினைத்திருக்கிருன் என்பதை தெரிந்து கொள்ளக்கூட அப்படி இருந்திருக்கலாம், ரசிகனைப் போல்!

சிலருக்குத் திறமையினுல் தலைக்கனம் அதிகரிக்கிறது. இன்னும் சிலருக்கு முதுகைத் தடவினுல் தலை கனக்க ஆரம்பிக்கிறது. ஆனல் தைமூருக்கு போர்வீரன் என்ற நம்பிக்கையிருந்தது. சர்வாதிகாரி என்ற தலைக்கனம் இருந்தது; உலகம் புகழ்கிறதே என்ற கர்வமிருந்தது. இவைகளினுலேயே சுகம் கண்டவன், சுவைபெற்றவன் மற்றவர்களின் முகஸ்துதியை எப்படி ஒதுக்கித் தள்ளுவான். அதனுல்தான் கிழவனின் ‘பலகட்டை’க் குரலைக்கூட விழிமூடி தலையசைத்து ரசித்துக்கொண்டிருந்தான் அவன்.

விடியப்போகிற நேரம்: வியர்த்துச் சோர்ந்துபோன குதிரையொன்று அரண்மனைப்பக்கமாக லொக்லொக்கென்று ஓடிக்கொண்டிருந்தது. நகர் காவலன் கைதட்டி நிறுத்தினுன் குதிரையை. நடுக்கத்தோடு அந்தக் குதிரைக்காரன் பதில் சொன்னுன். அவனுடைய முகத்திலே கவலையும் அச்சமும் முட்டி மோதிக்கொண்டிருந்தன.

“அமீரைப் பார்க்கவேண்டும். நான் இஸ்தகாரிலிருந்து வருகிறேன். அங்கே சதி நடந்துவிட்டது. அபிப் கிறிஸ்துவர் பக்கம் சேர்ந்துவிட்டான். நமது கோட்டையிலே கிறிஸ்துவக் கொடி பறக்கிறது” என்ருன். அந்த நள்ளிரவிலேகூட நகர் காவலாளியின் முகம் சிவந்ததைக் காணமுடிந்தது. பல்லைக் கடித்தான். சிறிது நேரத்திற்குள்

— 7ம் பக்கம் —

எஸ். ஏ. பி. ...

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

அடுத்த வீட்டு அன்னம்மா தினசரி கொஞ்சம் சர்க்கரை கொடுப்பாள். போதாதா?

பையன் துள்ளிக் குதித்துக் கொண்டு விளையாட ஓடினன். தலை தட்டுகிற வாசலின் வழியே குனிந்து பாம்புபோல் வெளியிலே வந்தாள் அஞ்சலே. தூரத்தில் விளையாடிக்கொண்டிருந்த பையன்களோடு தன் பையனும் போய்ச் சேர்ந்துகொள்வதைப் பார்த்தபடி அசையாமல் நின்ருள். வழக்கமாக வருகிற கிராமத்துத் தபால்காரர் அந்தப் பக்கத்தில் வந்தார். தனக்கு ஏதாவது கடிதமிருக்குமா என்று தெரிந்துகொள்ள அஞ்சலேயின் மனம் துடித்தது.

"எனக்குக் கடுதாசி இருக்கா?" என்று ஆர்வமும் தழுதழுப்பும் நிறைந்த குரலில் கேட்டு வைத்தாள்.

தபால்காரன் கையிலிருந்த கடிதங்களை ஒவ்வொன்ருகப் புரட்டினன். அஞ்சலேயின் மனம் படபடவென அடித்துக்கொண்டது. ஒவ்வொரு கடிதத்தைத் தபால்காரர் கூர்ந்து பார்க்கும் போது தனக்கு வந்ததுதான் என்று மனது தாவிக் குதித்தது. உடனே தபால்காரர் உதட்டைப் பிதுக்கும்போது அந்த மனது கண்ணாடிப் பாத்திரம்போல் உடைந்தது. உறுதியாக ஒரு கடிதத்தை 'அஞ்சலேயம்மாள்' என்று தபால்காரர் நீட்டியபோது அவள் நெஞ்சம் கடலளவு விரிந்து கரைகாணுது பொங்கியது. அந்தக் கடிதத்தை எடுத்துக்கொண்டு வீட்டுக்குள்ளே ஓடினுள். உள்ளே சென்ற பிறகுதான் அவளுக்குப் பிரக்ஞையே வந்தது. கடிதத்தைக் கண்டால் மட்டும் போதுமா? படிக்கத் தெரிய வேண்டாமா? அஞ்சலேக்குப் படிக்கத் தெரியாது. எப்போதும் அவளுக்கு வரும் கடிதங்களைப் பள்ளிக்கூட வாத்தியார் பாலசுப்ரமணிய அய்யரின் மகள் சீதாதான் படித்துக் காட்டுவாள். கடிதத்தைக் கண்டதும் அவளிடம் ஓடவேண்டிய அஞ்சலே தன்னை மறந்து வீட்டுக்குள் வந்து விட்டதை நினைத்து திரும்ப வெளியேறி சீதாவைத் தேடி ஓடினுள். சீதா, சிறு வயதில் மணமுடித்து அதே வயதில் அறுத்துப் போட்டுவிட்டவள்-ஆம், அவள் விதவை. அஞ்சலே ஓடி வந்தபோது அவள் கிணற்றடியில் நின்றுகொண்டிருந்தாள். அவசர அவசரமாக வந்த அஞ்சலே, "அம்மா அம்மா இதைப் படிச்சுக் காட்டுங்களேன்" என்று கடிதத்தை அவளிடம் நீட்டினுள். அவளைத் தொட்டுவிடாமல் கடிதத்தை மட்டும் தொட்டு வாங்கிப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள் சீதா.

அன்புள்ள அஞ்சலேக்கு,

புருஷன் வடிவேலு எழுதியது. நான் எழுதின போன கடதாசி கெடச்சிருக்குமென்று நெனைக்கிறேன். நீயும் வதில் எழுதவிலலே. ஏன், யாரும் கடதாசி எழுதித் தரல்லியா? நம்ம சுப்பக்கோனுரு மகன் முருகையா கிட்டே சொன்னுல் எழுதித் தருவான். அவசியம் வதில் எழுது. எனக்கு அடிக்கடி சின்னையாவைப் பாக்கனும் போலிருக்குது. சின்னையா எப்படி இருக்கான்? என்னை நெனைச்சுக்கிருனு? முந்தி கீவாய்ப்பல்லு விழுந்திருந்ததே மொளைச்சிருக்கா? அடுத்த வருஷம் அவனைப் பள்ளிக்கூடத்திலே படிக்க வைக்கவேணும்னு நெனைச்சுக் கிட்டிருக்கேன். மாமா வுந்திருந்தாரா? மாமா மகன் பாகம் பிரிச்சுக்கிட்டுப் போய்ட்டானும்! கடதாசி எழுதியிருந்தான். வீடு மழை பேஞ்சால் ஒழுகுச்சே! கூரை மேஞ்சாச்சா! பத்திரமாக இருந்துகொள்ளவும். நான் அடுத்த மாசம் வாக்கில் லீவு எடுத்துக்கிட்டு ஊருக்கு

— அவதியுறும் அஞ்சலே —

வரலாம்னுதான் இருந்தேன். பரமக்குடி மூக்கையா அண்ணனுக்கும் எழுதியிருந்தேன். ஆனல், இன்னும் பத்து நாளில் நாகா மலேப்பகுதிக்கு நாங்களெல்லாம் போகவேண்டுமென்று உத்தரவு வந்து விட்டது. ரெண்டு வருஷமாவே உன்னைப் பார்க்கணும் பார்க்கணும்னு துடியாய்த் துடிக்கிறேன். கமாண்டண்டு கிட்டேயும் சொல்லி எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தேன். ஒன் பெண்டாட்டியை நாயா தூக்கிக்கிட்டுப் போப்போவுது என்று கேட்டார். மனசுக்கு ரொம்பவும் வருத்தமாக இருக்கிறது. வேலையை விட்டுட்டு வந்திடலாம்னு கூட நெனைச்சேன். ஊருக்கு வந்து என்ன செய்யிறது? இருந்த காணி நிலத்தையும் ஒத்தி வச்சு, அதுவும் வட்டியிலே முழுகிப் போயிவிட்டது. ஊருக்கு வந்தால் மாமா என்ன சொல்வாரோ என்றும் பயமாக இருக்கிறது. ஒனக்கு இருபது ரூபாய் கொடுக்கச் சொல்லி மாமாவுக்கு எழுதியிருந்தேன். அது விஷயம் என்ன ஆச்சு என்றும் தெரியவில்லே. கொடுத்தாரா? வதில் எழுது. நம்மவூர் கந்தசாமி அண்ணன் மகன் முத்துச்சாமியும் இங்கு தான் மாற்றலாகி வந்திருக்கிறன். அவனும் சம்சாரத்தைப்பற்றியேகவலேப்பட்டுக் கிறன். அவன் சௌக்கியமாயிருப்பதாக அவன் சம்சாரத்திடம் சொல்லு. இதோடு இருபது ரூபாய் அனுப்பியிருக்கிறேன். இன்னம் ரெண்டு மாசத்துக்குப் பணம் அனுப்புறது கஷ்டம். பாத்து நடந்துக்க. என்னமோ நம்ம பொழச்ச பொழைப்பு! பொண்டாட்டி புள்ளேயோட வாழமுடியாமப் போச்சு. நாளை மலேப்பகுதிக்குப் போனுல் திரும்பிவர ஆறு மாசமாவது புடிக்கும். முந்தி ஐதராபாத்துக்குப் போன மாதிரிதான். வர்த்தப்படாதே! கடவுள் செயலா நான் மலைப் பகுதியிலிருந்து உயிரோட திரும்பிட்டால் இந்த வேலேக்கே ஒரு முழுக்குப் போட்டுட்டு வந்திடுறேன். அதுவரைக்கும் சின்னையாவைப் பத்திரமாப் பாத்துக்க. பெரிய ரோட்டுப் பக்கம் விடாதே. வண்டி, காரு வரும். நான் போற எடத்திலே நெறைய பொம்மையெல்லாம் வாங்கி வர்றேன்னு அவனுக்குச் சொல்லு. முந்தியே நல்லா பேசுவான். இப்ப சுத்தமாப் பேசுருனு? நீயும் ஓடம்பைப் பத்தரமாப் பாத்துக்க. ஒன்னையும் சின்னையாவையும் நெனைச்சு நெனைச்சு எனக்கு ராத்திரிக்கெல்லாம் தூக்கம் வரமாட்டேன் என்கிறது.

இங்கே காம்ப் சாப்பாட்டால் வயிற்றுவலி வேறு வந்து விட்டது. நம் ஊரில் கீரை சாப்பிட்டால்கூட ருசியாக இருக்கும். அதுக்குக்கூட கடவுள் நமக்குக் கொடுத்து வைக்கல்லே. என்ன பண்றதுன்னு ஒண்ணும் புரியல்லே. எப்படியும் இந்த வேலேயை விட்டால் ஒழிய லீவு எடுத்துக்கிட்டு ஊருக்கு வர்ரது ரொம்பக் கடுசு. நீ, முடிஞ்சா மாமாவைப் பாத்து நா ஊருக்கு வந்தா ஏதாவது பொழைப்புக் குடுப்பாரான்னு கேளு. அரைவயித்துக் கஞ்சி குடிச்சாலும் ஒம் பக்கத்திலேயே இருக்கணும்னு மனசு துடியாய்த் துடிக்கிது. காளியாத்தா கருணை எப்படி இருக்குதோ? நாங்க இப்போ போகப் போற இடம் ரொம்ப பயங்கரமான இடமாம்! ஒன் தாலி பலம் நல்லா இருந்தா நான் கண்டிப்பா உயிரோடு வந்து சேர்ந்திருவேன். எதுக்கும் நீ மனசைக் கலங்க விடாதே! நாம யாருக்கும் ஒரு தீங்கும் செய்யல்லே. நமக்கு எதுவும் நேராது. கடதாசி ரொம்ப நீண்டு போச்சு.

கமாண்டண்டு ஐயா எனக்கு இன்னிக்கு எக்ஸ்ட்ரா டூட்டி குடுத்திருக்காரு. விசயம் இவ்வளவுதான். நீ ஓடனே வதில் எழுது. சின்னையாவைப்பத்தி நெறைய எழுது. இப்ப நான் ஆயிரம்விளக்குக் காம்பிலே இருக்கேன். இன்னம் "பத்து நாளைக்கும் இங்கேதான் இருப்பேன். என் விலாசத்தைக் கீழே எழுதியிருக்கேன். மைற்றவை பின்பு வேணும்.

காளியாத்தா துணை.

என் விலாசம்:

சோ. வடிவேலு,
எஸ். ஏ. பி. காம்ப்,
ஆயிரம்விளக்கு,
மதராசு.

சீதா கடிதத்தைப் படித்து முடித்துவிட்டு அஞ்சலேயை நிமிர்ந்து பார்த்தாள். அவள் கன்னம் பொதும்பி நின்றது. கடிதத்தின் ஆரம்ப முதலே அவள் அழுது கொண்டிருக்கிருள் என்பதைத் தெரிந்துகொள்ள சீதாவுக்கு வெகு நேரம் பிடிக்கவில்லே. சீதாதான் என்ன! அவளும் அழுது கொண்டுதானிருந்தாள். சீதாவுக்குக் கணவனில்லே. அஞ்சலேக்கு இருந்தும் இல்லே. இது அவர்களுக்குள்ள ஒற்றுமை. சீதா கண்ணீரைத் துடைத்துக்கொண்டு கடிதத்தை அஞ்சலேயிடம் கொடுத்து 'அழாதே அஞ்சலே! விதி யாரை விட்டது' என்று கூறி அமைதிப்படுத்தினுள். கடிதத்தை வாங்கிக் கொண்டு நடந்த அஞ்சலேயின் தலே சுற்றிற்று. உலகமெல்லாம் தனக்கு எதிரியானது போல் ஒரு பயங்கரமான எண்ணம் உண்டாயிற்று. வழியிலேயே கடிதத்தை விரித்துப் பார்த்தாள். படிக்கத் தெரியாத அவளும் படிக்கும்படி சில இடங்கள் அதில் இருந்தன. ஒவ்வொரு சொட்டுத் தண்ணீர் விழுந்து கடிதத்தில் சில இடங்களில் மை கரைந்திருந்தது. அது தண்ணீரல்ல, தன் கணவனின் கண்ணீர் என்பதைத் தெரிந்துகொள்ள அஞ்சலேக்குப் படிப்புத் தேவையாக இல்லே. அதைப் பார்த்ததும் அவள் விக்கி விக்கி

— 6-ம் பக்கம் —

எண்ணம்
மலர் 4 ‖ 6–7–57 ‖ இதழ் 2

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் : அஞ்சேன் !"

இலங்கையில் வாழும் என் தமிழ்த் தோழி !

தோழிநின் கடிதம் கண்டேன்
துவண்டது நெஞ்சம் ! ஐயோ !
ஈழவர் நாட்டில் நீயும்
இன்புறுங் கணவர் தாமும்
ஆழியாய் அலைகள் மோத
அழிவதை எண்ணுங் காலை
பாழுமித் தமிழர் நாட்டின்
'பாப'த்தை நினைக்கின் றேன்யான்!

படைகொண்டு மோதி வென்ற
பாண்டியர், ஈழ நாட்டில்
விடைகொண்டு திரும்பி டாமல்
வேரூன்றி நின்றி ருந்தால்
கடைதாவிக் குதிக்கு மிந்தக்
காடையர் வாழ்க்கை இன்று
நடைதேய்ந்து போயி ருக்கும்;
நம்மவர் செய்தா ரில்லை !

இலங்கையை வென்ற பின்னர்
இராசரா சனும்தி ரும்பி
இலங்கிடும் சோழ நாட்டிற்(கு)
ஏன்வந்தான் ? ஈழ மண்ணில்
துலங்கிடும் கொடிஎந் நாளும்
சோழரின் கொடியே யாக
விளங்கிடச் செய்தி டாமல்
விட்டனன் ! தவறே செய்தான் !

பிடித்ததை விட்டார்; நம்மைப்
பிடித்தவர்க் கடிமை யானார் !
கெடுத்தனர் முன்னோர் ! அந்தக்
கீழ்மையால் புவியெ லாமும்
படுத்தனன் தமிழன் ! அந்தப்
பாவிகள் செய்த 'பாவம்'
அடுத்தநம் தலைமு றைக்கும்
அவதியைத் தந்த தன்றோ ?

எங்கெங்கோ போனான்; 'வெற்றி
ஏறுநான்' என்றான் ! இன்று
அங்கங்கே தமிழ ரெல்லாம்
'அவன்வேறு நான்வே றெ'ன்றார் !
சிங்கம்போல் முன்னோன் சென்றான் !
தீப்பசிக் குணவு தேடி
அங்கெல்லாம் பின்னோன் சென்றான் !
அடங்கினன்; ஒடுங்கி மாண்டான் !

எல்லோர்க்கும் வாழ்வ ளித்த
இளித்தவாய்த் தமிழர் நாடு
நல்லதோர் குணத்தி னால்தான்
நலிந்தது ! ஈழ நாட்டில்
கல்லார்க்கும் கல்வி தந்த
கனித்தமிழ் மொழியும் இன்று
புல்லோரம் தலையைத் தூக்கிப்
'போகவா வரவா' என்னும் !

தங்கமே ! ஈழ நாட்டார்
தாய்மொழி அழிப்ப தற்குப்(ப்)
பொங்குவ தெழுதி யுள்ளாய்
பொறுமினேன் படித்த போது !
இங்கென்ன வாழ்வு ? தூய
எழில்மொழி வெட்டிச் சாய்க்க
இங்குள்ள தமிழ னேதான்
எழுகின்றான் கொடுவாள் தூக்கி !

செல்வமே ! "சிங்க நாட்டார்
சிந்தையைக் கலைப்ப தற்கு
வல்லவர் நேரு என்றும்
வழிஅவர் சொல்வா ரென்றும்
எல்லோரும் நம்பி யுள்ளார்"
என்றுநீ எழுதி யுள்ளாய் !
சொல்லாதே ! உலகஞ் சுற்றும்
சூரர்க்கு இதுவா வேலை ?

அரசியின் விருந்தும், பண்டா
அமைச்சனின் தோளும், 'லோக'
அரசியல் பேச்சும், பெண்கள்
ஆட்டமும், கீதம் பாடும்
சரசியின் சிரிப்பும், எங்கும்
சல்லாபக் கூத்தும் கண்டு
வருபவர்க் குனது அன்னை
வாழ்ந்தென்ன, மடிந்தா லென்ன !

அவர்பெரும் மன்னர் ! இன்று
அணுகுண்டே அவர்த லைமேல் !
அவர்உன்னை நினைப்ப தற்கு
அத்தனை சிறியா ரல்லர் !
அவர்வீட்டு மாடு கள்போல்
அலைப்புறும் தமிழ ரன்றி
எவர்உன்னை நினைப்பார் ? சொந்த
இரத்தந்தான் பேசும் கண்ணே !

தொட்டிலில் துவளும் போதும்
தோள்வைத்துக் கொஞ்சும் போதும்
வட்டிலில் உண்ணும் போதும்
மார்மீதில் தவழும் போதும்
கட்டிலில் மனைவி யோடு
காதலுக் கணைப்பும் போதும்
மட்டிலா மகிழ்வு நல்கும்
மகனென்ற இரத்த பாசம் !

அடுத்தவீட் டம்மா ளுக்கு
அதைப் பற்றிக் கவலை யேது ?
படுத்தவன் எழுந்தா லென்ன;
பாடையில் போனா லென்ன !
நடுத்தெரு நின்றா லென்ன;
நாளெலாம் அலைந்தா லென்ன !
எடுத்ததோர் திருடன், விட்டு
ஏங்குவார்க் கழுவ துண்டோ ?.

குன்றத்தின் உச்சி யேறிக்
கொடும்புலி பாம்பு கொன்று
அன்றந்த இலங்கை நாட்டை
ஆக்கினான் உனது பாட்டன்
இன்றந்த நாட்டில் நீயும்
எனதமிழ்த் தோழர் தாமும்
நன்றிகொன் றார்வோ ராலே
நலிவுற நேர்ந்த தென்றால்

என்னயான் சொல்வேன்; வாழும்
இருபது லட்சம் பேரும்
என்னவர் ! எனது மூச்சு !
இழைபிரித் தெடுத்த பாகம் !
அன்னமே ! வருந்த வேண்டாம் !
'அழிவது தமிழே !' என்று
சொன்னவர் அழியு மாறு
துவக்குக போரை ! வெல்வோம் !

குருதியே ஓடி னாலும்
குடல்நிணம் சிதைந்த போதும்
பரிதியின் மாலை வண்ணம்
படைத்தது மண்ணென் றாலும்
வருதுயர், தமிழுக் கென்றே
'வாழிய' பாடல் பாடி
உறுதியில் இறங்கு ! வெற்றி
உனக்கிது இயற்கை வேதம் !

மொழியின்றி விழிக ளில்லை !
மூச்சில்லை பேச்சு மில்லை !
கழிசடை 'உடமை' யாளர்
கருவிலே கயமை தோய்ந்தோர்
இழிமொழி வீசி னாலும்
எடுபிடி வேலை செய்து
அழிவுனக் கீந்த போதும்
அஞ்சிடேல் ! பண்பு குன்றேல் !

நாமெல்லாம் தமிழ மக்கள்
நமக்குநாம் பாது காப்பு !
நாமெல்லாம் அழிவ தால்ஓர்
நாட்டினர் வாழ்வா ரென்றால்
நாமெல்லாம் வாழ்வ தற்கந்
நாட்டினர் அழிதல் நீதி !
நாமெல்லாம் அழிந்து எந்த
நாடிங்கு வாழும் ! பார்ப்போம் !

தமிழர்கள் கெடுவ தொன்றே
தரணியின் முறையா ? தூய
அமிழ்தொழித் தாக்கர் கூட்டம்
ஆள்வது சரியா ? இல்லை !
தமிழுக்கும் தமிழ ருக்கும்
தடைபோடும் வெறியர் தம்மை
இமைவேறு கண்கள் வேறாய்
இருநூறு துண்டங் காண்போம் !

அங்குநீ போர்து வக்கு !
அடுத்தபோர் தமிழர் நாட்டில் !
இங்குநம் மொழியைத் தாக்கும்
இந்திக்குப் பாடை கட்டி
சங்கொடும் பறைமு ழக்கி
சட்டியில் கொள்ளி தூக்கி
அங்குல எலும்பு கூட
அகப்படா தழிப்போம் ! உண்மை !

தென்னவர் இந்தி கற்கச்
செப்புவோன் தமிழ னல்லன் !
அன்னையை வடவர் கூடி
ஆக்கிய கருவே அன்னான் !
சின்னதோர் இடையாய் ! உன்னை
சிங்களம் படிக்கச் சொன்னால்
அன்னவர்க் கிதையே சொல்லு !
ஆம்; இது தமிழ ரத்தம்.

—கண்ணதாசன்

தயாராகிறது !

தென்றல்
மும்முனைப் போராட்ட மலர்

விலை அணா எட்டு

★

முன் பணம் அனுப்பாத ஏஜண்டுகளுக்கு
மலர் அனுப்பப்படமாட்டாது.

தென்றல் அடுத்த இதழ்
மும்முனைப் போராட்ட மலராக
வெளிவரும்.

கணவரின் அறைகூவலும் மனைவியின் கவிதையும்!

"அரசாங்கத்தில் இன்ன இன்ன குறைகள் இருக்கின்றன, திருந்தவேண்டும்" என்று எதிர்கட்சியினர் எடுத்துச்சொன்னால் 'நீ கொலுவுக்கு வந்தால் குறைகளைத் தீர்த்துவிடுவாயோ' என்று கேட்பது இங்குள்ள 'காமராசர்களின்' தனிப் பண்பு. 'சமையல் நன்ருக இல்லை. ஒரே உப்பு, என்று கணவன் குறைப்பட்டுக்கொண்டால் 'ஏன், நீங்கள் சமைப்பது தானே நன்ருக,' என்று எந்த மனைவியாவது கூறினல் அது கணவனுக்கு வேதனை தருவதாகவும் ஏனையோர்க்கு நகைச்சுவை விருந்தாகவும் அமைவது வாடிக்கை. ஆனல் இதுபோல் ஏற்பட்ட போட்டி, அல்லது பூசல் இலக்கிய உலகுக்கு பல எண்ணற்ற செல்வங்களைத் தந்திருக்கிறது என்ருல் ஆச்சரியப்படுவீர்கள்.

"காமம் கலவாத காவியம் ஒன்று எழுத உன்னல் முடியுமா" என்று குலோத்துங்க சோழன் எழுப்பிய வினு அம்பிகாபதியின் இதயத்தைப் பிளந்து, குருதியிலே சூடேற்றி, உணர்ச்சியைத் தூண்டி, அறிவைத் தாக்கி என்றும் அழியாத ஒரு அமர காவியத்தைத் தமிழ் இலக்கியப் பேழையிலே சேர்த்து வைத்தது. நெஞ்சிலே அமராவதியை நிறைத்து, நினைவிலே காதலை நிறுத்தி, எழுதுகோலிலே எண்ணத்தைத் தாங்கி, ஏட்டிலே அந்த இளம்புலவன் தீட்டிக் காட்டிய காவியம் தமிழ் மனையில் ஒரு நிருவிளக்கு. கூத்தனுக்கும் கம்பனுக்கும் இடையே ஏற்பட்ட போட்டிதான் இராமாயணம் யாத்ததற்குக் காரணம் என்பர். இதுபோல் மனத்தாங்கல்களிலே உருவான மங்காத இலக்கியச் செல்வங்கள் பல.

அமெரிக்க இலக்கியத்திலே புதினம் ஒன்றும், கவிதை ஒன்றும் போட்டியிலே உருவான பொன் ஏடுகளுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன: சேம்சு பெனிமோர் கூப்பர் என்பவர் ஒருநாள் புதினம் ஒன்று படித்தார். அவர் சுவைத்துப் படிக்க முடியாத அளவிற்கு சுவை கெட்டு இருந்தது அப்புதினம். தன் மனைவியிடம் அதை குறைத்துப் பேசினர். இகழ்ந்து உரைத்தார். ஆனல் திருமதி கூப்பர் அந்த பெருங்கதையை ரசித்துப் படித்திருந்தார் போலும். தன் உள்ளம் கொண்ட ஒன்றை பிறர் உதாசீனமாகப் பேசுவது யாராலும் தாங்கமுடியாத ஒன்று. அவர் புதினத்தை ஏளனமாகப் பேசியது இந்த அம்மையாருக்கு எரிச்சலை மூட்டியது. 'குறை கூறினல் மட்டும் போதாது. இதைவிட சிறந்த பெருங்கதை ஒன்றை எழுதிக் காட்டுங்களேன் பார்ப்போம்.'—சினம் கொப்பளிக்க பேசினள் அந்த சிங்காரி. மனைவியின் கொஞ்சு மொழி கேட்டு நெஞ்சம் மகிழும் மணுளன் அன்று அக்கோப மொழிகளைக் கேட்டு துடித்தார். துவண்டார். மனைவி உதிர்த்த சொற்கள் அவர் மான உணர்ச்சியைத் தூண்டின. அறிவு தலை தூக்கியது, உணர்வு துணை நின்றது, முடிவு ஆங்கில இலக்கியப் பட்டியலிலே ஒரு சிறந்த தொடர்கதை 'வருமுன் காத்தல்' என்ற பெயரில் தன்னையும் இணைத்துக்கொண்டது. இது மனைவி மணுளனுக்கு விட்ட சவால்.

இதுபோல கணவன் மனைவிக்கு விட்ட சவால் ஒரு கவிதை உருவாகக் காரணமாக அமைந்தது. 1862 பிப்ரவரி 2-ம் நாளில் வெளியான 'அட்லாண்டிக் திங்களிதழ்' என்ற ஆங்கில ஏடு 'குடியரசின் போர் திருப்புகழ்ப் பாடல்' என்ற கவிதை ஒன்றைத் தாங்கி வெளிவந்தது. புது நீர் கண்ட மீனினம்போல் அமெரிக்க மக்கள் அப்புதிய கவிதையை பாடித் திளைத்தனர். படித்து மகிழ்ந்தனர். அந்த சிறந்த கவிதையை உருவாக்கிய பெருமை திருமதி சூலியா வார்டு ஓவே என்ற பெண்மணிக்கு உரியது.

திருமதி ஓவேயின் கணவர் அமெரிக்க உள்நாட்டுக் கலகத்தின் ஆரம்பகாலத்தில் சுகாதாரக் குழுவில் ஒரு மருத்துவராக பணியாற்றிக்கொண்டிருந்தார். படையினர் அடிவைத்து நடந்து செல்லும்பொழுது பாடப்படும் 'சான் பிரௌணின் உடல்' என்று துவங்கும் பாடலை திருமதி ஓவே ஒருநாள் தன் கணவரிடம், "இசை நயம் இல்லை, கவிதை நயம் கம்மி, கருத்துச் செறிவு குறைவு" என்றெல்லாம் சொல்லி குறைபட்டுக் கொண்டார். 'ஏன் அதைவிட புகழ்மிக்க கவிதை ஒன்று நீ புனைவது தானே' என்று கூறிவைத்தார் அவர். 'நிச்சயமாக எழுதத்தான் போகிறேன்' என்று அவள் கொடுத்த உறுதிமொழி அவள் நினைவிலே நிலைத்தது. இரவெல்லாம் தூக்கமின்றி வாடினள். வதங்கினள் மான உணர்ச்சி ஆட்டிப் படைக்கும்பொழுது எதையும் செய்து முடிக்கும் திறமை மனித இனத்திடம் எப்படியோ அமைந்துவிடுகிறது. 'என் கணவன் கள்வனு?' என்று கண்ணகியின் இதயத்தைத் துளைத்த மான உணர்ச்சி தான் மன்னன் நெடுஞ்செழியனை மாய்க்கவும், மதுரைமா நகரை எரியுண்ணச் செய்யவும், செங்குட்டுவன் வடவரை வணக்கி இமயத்திலே சிலை பொறிக்கவும், நமக்கு சிலப்பதிகாரம் என்ற செந்தமிழ் ஓவியம் கிடைக்கவும் காரணமாக இருந்தது என்பதை யார் மறக்கமுடியும். அதே மான உணர்ச்சிதான் இந்த மங்கையர் திலகத்தையும் தட்டி எழுப்பிற்று. 'அந்தப் பெருமகன்வரும் பெருஞ்சிறப்பை என் விழிகள் பார்த்தன' என்ற முதல் இடி இரவு தூக்கத்திலே அவர் நினைவைத் தொட்டது. படுக்கையிலிருந்து எழுந்தார் அப்பாவை. விளக்கை ஏற்றிவிட்டு காகிதக் கற்றையிலே தன் பேனவை ஓட்டினர். நெஞ்சிலே ததும்பி வழிந்த கவிதை ஊற்றை காகிதம் தன் மேல் எழுத்துக்களாகப் பொறித்துக்கொண்டது. பொழுது புலருவதற்கு முன்பே ஒரு புதிய கவிதை உருவானது. உருவாக்கி மனைவியைப் பாராட்டி அன்று கணவர் மகிழ்ந்தார். அந்த இலக்கியச் செல்வியை இன்று ஆங்கிலம் அறிந்தவர் அனைவரும் போற்றுகின்றனர், புகழ்கின்றனர்.

"கண்ணின் கடைப்பார்வை
காதலியர் காட்டி விட்டால்
மண்ணில் குமார்க்கு மாமலையும்
ஓர் கடுகாம்"

என்ற புரட்சிக் கவிஞரின் கவிதைக்கொப்ப, மனைவியின் அறைகூவல் கணவர் திரு. கூப்பரை கதாசிரியராக்கியது. பின்னதில், மணுளனின் ஏளன மொழி மனைவியை கவிஞராக்கியது: நினைவு எழுதிய புதினமும், இரவிலே உருவான கவிதையும் அமெரிக்க இலக்கியச் சோலையில் என்றும் அழியாத-இறவாத புகழ்பெற்ற இலக்கியக் கருவூலங்கள்.

— நாஞ்சில் அன்பெழில்.

சாதிகள் இல்லையடி பாப்பா??

ஜாதி மத வேறுபாடுகள் களைந்தெறியப்பட்டு விட்டதாக தேசியத்தார் தம்பட்டமடித்து வரும் இந்த நாட்களில்கூட பத்திரிகைளில் ஜாதிப் பெயர்கள் விருப்பத்தோடு சேர்த்து வரப்படுகின்றன. சுதந்திர தாயகம் இது-இங்கே ஜாதிகள் இனி இல்லை என்று ஒரு காலத்தில் முழக்கமிட்ட காங்கிரஸ் கட்சியினர்தான் இப்போது இதை மிக அன்போடு அனுசரித்து வருகிருர்கள். காங்கிரஸ் ஏடுகளும் இந்தத் திருத்தொண்டினையே செய்துவருகின்றன. இந்த நிகழ்ச்சிகளை எண்ணும்போது, சராசரி அறிவு படைத்தவர்கள்கூட 'ஜாதிப் பிரச்சனை' நாட்டில் ஒழிந்துவிட்டதாகக் கருதமாட்டார்கள்!

ஆனல், நாட்டில் இன்றுள்ள சூழ்நிலையை ஏறிட்டுப் பார்க்கும்போது பல தனி நபர்கள், - சீர்திருத்த எண்ணம் கொண்டவர்கள் ஆகியோரெல்லாம் பெயருக்குப் பின்னல் 'வர்ணத்தின்' பெயரைச் சேர்த்துக்கொள்ள உண்மையிலேயே வெட்கப்படுகிருர்கள் என்று தெரிகிறது. இந்த நேரத்தில் பத்திரிகைகளின் தொண்டு மக்களின் எண்ணத்தையும் ஏற்பாட்டையும் ஆதரிக்கும் விதம் அமையவேண்டும். அல்லது மக்களுக்கு நன்றி கூறவேண்டும். இல்லாவிட்டால் 'மக்களே ஜாதிகளை ஒழியுங்கள்' என்று வேண்டுகோள் விடுக்கலாம். இதையெல்லாம் காங்கிரஸ் ஏடுகள் செய்யத் தவறிவிடுவதோடு மட்டுமல்லாமல், ஜாதி வெறியையே தூண்டிவருகின்றன. இருபதாம் நூற்றாண்டு நாகரீக உலகத்திலே இந்த நிகழ்ச்சி அநாகரீக நிலைமையைத்தான் ஏற்படுத்தி வருகிறது.

தினமணி, சுதேசமித்திரன் போன்ற காங்கிரஸ் ஏடுகள் சட்டசபை நடவடிக்கைகளைப் பற்றிய செய்திகளை வெளியிடும்போது, எம். எல். ஏக்களின் பெயர்களோடு, ஜாதிப் பெயரையும் சேர்த்தே வெளியிடுகின்றன. இன்ன எம். எல். ஏ, இன்ன தொகுதி, என்று போட்டாலே போதும்! அதை விடுத்து ஜாதிப் பெயரையும் சேர்த்து, தமது ஜாதிப் பிரச்சாரத்துக்கு ஆக்கம் தேடிக்கொள்ளுகின்றன மேற்படி பத்திரிகைகள்! சட்டசபையில் ஜாதிப் பெயர் சொல்லி அறிவித்தால்கூட அதை பலமாக ஆட்சேபிக்க வேண்டிய பொறுப்பு பத்திரிகைகளுக்கு இருக்கும்போது, அவை, அதைப் பொருட்படுத்தாமல் ஜாதிப் பிரச்சனையை வளர்த்து வருகின்றன; இதை எண்ணும்போது 'பத்திரிகா தர்மம்' என்று சொல்லப்படுகிறதே, அது ஒழிந்துவிட்டதோ என்று நாம் ஐயுறுகிருேம்.

மதச்சார்பற்ற நிலைமை, ஜாதி பேத அமைப்புகள் நீங்கிய தன்மை-இவற்றிலே அக்கறை கொண்ட எவரும் இந்த நிலையை வரவேற்கமாட்டார்கள் என்பது நாடறிந்த விஷயம். ஆனல், தேசீயப் பத்திரிகைகள்-வெறியுணர்ச்சியைக் கண்டிக்க வேண்டிய பத்திரிகைகள் இதை அலட்சியப்படுத்தி-ஜாதி வெறியை வளர்த்து வருவது கண்டனத்துக்குரியதாகும்! தவருன ஒரு நிலையை நாட்டில் வளர்ப்பதே தவறு! கொலை செய்பவர்களுக்கும் தண்டனை; கொலை செய்யத் தூண்டியவர்களுக்கும் தண்டனை இருப்பதுபோல, ஜாதிப் பெயரை விரும்பிச் சொல்பவர்களும் குற்றக்கூண்டுக்கு வரவேண்டும்; அந்த வெறி நிலையை மக்கள் மன்றத்தில் தூண்டுதல் செய்துவரும் பத்திரிகைகளும் குற்றக்கூண்டுக்கு வரவேண்டும்!

எஸ். ஏ. பி. ...

— 3ம் பக்கத் தொடர்ச்சி —

அழுதாள். கண்ணீர் ததும்பிய அவளது கணவனின் முகம் அவள் மனதிலே படம் படமாக விழுந்தது. எப்படித் துடிக்கிருரோ, என்னென்ன வெல்லாம் நெனைக்கிருரோ? இந்நேரம் எப்படி இருப்பாரோ என்றெல்லாம் எண்ணி எண்ணி அவள் பொருமினுள். அவளாகவே தன்னை அமைதிப் படுத்திக் கொள்ள முயன்ருள். நேற்று எழுதிய கடிதம் தானே இன்று கிடைத்திருக்கிறது! நேற்று அழுதிருப்பார் இன்று நிம்மதியாக இருப்பார் என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். சபலத்தில் பிறந்த இந்த அமைதியும் சிறிது நேரம்தான் இருந்தது. தன்னையும் சின்னையாவையும் மறந்திருக்க அவரால் முடியாது என்ற எண்ணம் அவளைக் குடைந்து குடைந்து துன்புறுத்திற்று. வழிந்த கண்ணீரைத் துடைப்பதற்கு முந்தானையைத் தூக்கவும் சக்தியற்றவளாய் குடிசை வாசலுக்கு அவள் வந்த போது, 'அக்கா! அக்கா!' என்று நாலைந்து சிறுவர்களின் சத்தம் கேட்டது. துடித்து வந்த அவள் பதறி, 'என்னடா என்ன!' என்று கேட்டாள். பையன்கள் மூச்சுத் திணறியபடி நின்ருர்கள். ஒருவன் சமாளித்து, 'நம்ம சின்னையா காலிலே வண்டிச் சக்கரம் ஏறிடுச்சு. வண்டியை விர்ருன்னு விட்டுக் கிட்டுப் போய்ட்டாங்க, வாங்களேன், வாங்க!'' என்றான். 'சின்னையா' என்று கூவிய அஞ்சலை பித்துப் பிடித்தவள் போல் ஓடினுள். அவள் உதடுகள் துடித்துத் துடித்து சின்னையாவின் பெயரை உச்சரித்தன.

ரத்த வெள்ளத்தில் கிடந்தான் சின்னையா. 'அம்மா அப்பா' என்று அவன் வாய் முணுமுணுத்தது. 'கண்ணு' என்று அவனைத் தூக்கி மார்பில் அணைத்துக் கொண்டாள் அஞ்சலை.

''எந்தப் பாவியடா செஞ்சான்? கண்ணு! கையிலே காசில்லாத நேரத்திலே இது வேறையா? ஐயோ! அம்மா!'' என்று பைத்தியக்காரி மாதிரி அலறினுள்.

''ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போ புள்ளே. ரெத்தம் கொட கொடன்னு கொட்டுது. சனியம் புடிச்ச பயலுக! ஊருக்குள்ளே கூடப் பந்தய வண்டியில்ல ஓட்ராணுக! சீக்கிரம் போ புள்ளே கத்தாமெ!'' என்ருர் அங்கு நின்ற முதியவர் ஒருவர்.

''ஆஸ்பத்திரிக்குக் குடுக்கக் காசில்லையே அய்யா! என்ன பண்ணுவேன்'' என்று தலையில் அடித்துக் கொண்டு அழுதாள் அஞ்சலை.

''போயி அதைச் சொல்லு புள்ளே. அப்படியா கல்லு மன சாப் போயிடும் டாக்குட்டருக்கு! போ புள்ளே நிக்காமெ'' என்று அவசரப்படுத்தினுர் முதியவர்.

முறிந்து கிழிந்து இரத்தம் கொட்டிக்கொண்டிருந்த சின்னையாவின் காலை முந்தானையால் மறைத்துக்கொண்டு 'ஓ'வென்று ஓலமிட்டபடி கிராமத்து ஆஸ்பத்திரியை நோக்கி ஓடினுள் அஞ்சலை.

சர்க்கார், கணக்கில் சேர்த்துக் கொள்ளாத கிராமத்திலும் ஒரு ஆஸ்பத்திரி இருந்தது. ஊரிலிருந்த பணக்காரர் ஒருவர் ஏற்படுத்தியிருந்த தர்ம ஆஸ்பத்திரி அது. அஞ்சலை அங்கு ஓடிவந்த போது முன்னுல் போடப்பட்டிருந்த நாற்காலியில் நாலைந்து நோயாளிகள் சீசாவும் கையுமாக உட்கார்ந்திருந்தார்கள். வரிசைக் கிரமப்படி அவர்களுக்குப் பிறகு தான் அஞ்சலையின் மகன் கவனிக்கப்பட வேண்டும். அது பட்டணமாக இருந்திருந்தால் இரத்தம் வடிவதையோ செத்து மடிவதையோ கவனிக்கமாட்டார்கள். அவளை ஐந்தாவதாக உட்கார வைத்திருப்பார்கள். ஆனுல் களங்கமற்ற கிராமத்தின் இதயம் அவள் வந்த கோலத்தையும் வடிந்த இரத்தத்தையும் கண்டு இளகியது. உட்கார்ந்திருந்த நாலு பேரும், ''போம்மா உள்ளே! போம்மா உள்ளே'' என்று அவளைத் தள்ளி விட்டார்கள். வேகமாக உள்ளே ஓடிய அஞ்சலை ''டாக்குட்டரய்யா டாக்குட்டரய்யா,'' என்று துடித்தாள். அவளைத்தொடர்ந்து வந்திருந்த சிறுவர் கூட்டமும் பெண்களும் அங்கேயே நின்று பரிதாபப்பட்டார்கள்.

டாக்டர். மூர்ச்சையடைந்திருந்த அந்தப் பையனை மேஜையின்மீது படுக்க வைத்து காலைத் தொட்டுப் பார்த்தார். நாலைந்து முறை அப்படியும் இப்படியும் பார்த்து விட்டு, ''எலும்பு நாலைஞ்சு எடத்திலேமுறிஞ்சிருக்கேம்மா! இது இங்கே ஒன்னும் பாக்க முடியாதே! புத்தூருக்குத் தான் கொண்டு போகணும். அது வரைக்கும் ரெத்தம் வடியாய் இருக்கிறதுக்கு வேணும்னு கட்டுப் போடுறேன், என்ருர். அவர் நல்ல குணம் உடையவர் தான் என்ருலும் பெரிய கேசுகளைப் பார்த்துப் பழக்கப்பட்டவரோ அல்ல. உண்மையைத் தான் அவர் சொன்னுர் என்ருலும், அஞ்சலை அங்கேயே செத்து விடுவாள்போலிருந்தது.

''புத்தூரு எங்கேய்யா இருக்கு?'' என்று அவள் கேட்டாள்.

''வேலூருக்குப் பக்கத்திலே'' என்று பதில் சொன்னுர் டாக்டர்.

அவள் இருக்கும் கிராமமோ இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடிக்குப் பக்கத்தில் உள்ளது. அங்கிருந்து வேலூர் வரவா? ஒரு வேளை உணவுக்கே திண்டாடும் அஞ்சலையா?

டாக்டர் தன் கடமையைச் செய்தார். அஞ்சலை வயிற்றிலடித்துக்கொண்டு அழுதாள்.

''ஐயோ! நா என்ன பண்ணப் போகிறேன். ஒன்னும் புரியல் லியே! அடபாவி என்னை 'இப்புடி மோசம் பண்ணிட்டியே! சோத்துக்கே திண்டாடுறேனே, புத்தூருக்கு எப்படிப் போறது? இன்னிக்கித்தானே அவர் கடதாசி எழுதியிருக்காரு நீ எப்படி இருக்காயின்னு! என்ன சொல்லப் போறேன்! காளியாத்தா எங்க வயத்திலே மண்ணைப் போட்டுட்டியே! சாமீ!......சின்னையா......மகனே......வழி ஒன்னும் தோணலியே!''

—அஞ்சலை பிதற்றினுள். அவளுக்காகக் கண்ணீர் வடிப்பவர்கள் அங்கே இருந்தார்கள். ஆனுல் அவர்களிலே காசு செலவழிப்பவர்கள் அங்கில்லை. பலபேர் கையிலே காசுமில்லை. பரம்பரைப் பஞ்சபூமியான இராமநாதபுரம் மாவட்டத்தில் கிராமவாசிகளின் கையிலே பணமிருக்குமானுல் அவர்கள் ஏன், எஸ். ஏ. பி. யில் சேருகிருர்கள்? ஆனுல் அவர்களிடையேயும் கொஞ்சம்பணமுடையவர்களும் இல்லாமலில்லை. அவர்தான் முக்கையக் கோனுர். தொடர்ந்து அவள்படும் துன்பத்தைக் காணச் சகிக்காதவராய் ''நானொரு இருபது ரூபாய் தர்றேன், அஞ்சலை! நீ எப்படியோ புத்தூருக்குப் போயிவைத்தியரு காலு கையைப் புடிச்சாவது பாத்துக்க. வா, வண்டி கட்டி டேசன்லே கொண்டு போயி விடச் சொல்றேன்'' என்ருர்.

அஞ்சலை அவர் கால்களைத் தொட்டுக் கும்பிட்டு, 'நீங்க நல்லாயிருக்கணும் மாமா' என்று கூறிவிட்டு ஆஸ்பத்திரி அறைக்குள்ளே ஓடினுள். இரத்தத்தை நிறுத்த அப்போதுதான் கட்டுப் போட்டு முடித்திருந்தார் டாக்டர். டாக்டருசகும் ஒரு கும்புடு போட்டு விட்டு பையனைத் தூக்கிக்கொண்டு முக்கையக் கோனுரோடு நடந்தாள் அஞ்சலை.

(தொடரும்)

வெங்கட்ராமனுக்கே வெளிச்சம்!

சட்டசபை நடந்துகொண்டிருக்கிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சரமாரிரியாகக் கேள்விகள் கேட்டு வருகிருர்கள். திடீரென்று மந்திரியாக வந்தவர்களெல்லாம் திணறுவதும், திண்டாடுவதும் பார்வையாளர்களுக்கு நன்ருகப் புரிகிறது. எப்படி வார்த்தைகளை உபயோகிப்பது என்று தெரியாமல் அவதிப்படுகிருர்கள். பதில் சொல்லமுடியாத நேரத்தில் 'சர்க்காருக்கு அதிர்ஷ்டமிருந்தால் கிடைக்கும்' என்று கூறி தப்பிக்கப் பார்க்கிருர்கள். அதுபோலவே சர்க்கரை ஆலைப்பிரச்சினை வந்தது. மந்திரி வெங்கட்ராமன் விக்கி, விம்மி, திக்கித்திணறி பதில் சொல்ல முனைந்தார். அதுவும், சரியான பதிலைச் சொல்லவில்லை.

புதிய ஆலைகள் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது; பழைய ஆலைகளில் இரண்டொன்று இயங்காமல் இருக்கின்றன! அதைத் தூண்டும் பொறுப்பை சர்க்கார் ஏற்றுக்கொள்ளமுடியாது. அனுமதிக்கப்பட்ட புதிய ஆலைகள் எப்போது தொடங்கும் என்று கூறுவதற்கில்லை – என்று பொருள் பட கனம் அமைச்சர் பேசியிருக்கிருர். அந்த நிர்வாகத்திற்கும் சம்பந்தமில்லாதவர்போல் மந்திரியின் பேச்சு அமைந்திருக்கிறது.

பழைய ஆலைகள் மூடப்பட்டதற்குச் செலாவணி தட்டுப்பாடுதான் காரணம் என்று சொல்கிருர்கள். அது தவறு. செலாவணித் தட்டுப்பாடு சென்னை மாகாணத்திற்கு மட்டும் எப்படி ஏற்பட்டது? பம்பாயில் சர்க்கரை அதிக உற்பத்தியாகிறது; ஒரு சில ஆலைகள் மைசூர் மாநிலத்தில் சேர்க்கப்பட்டும் அங்கேதான் சர்க்கரை மிகுதியாக உற்பத்தியாகிறது. அங்கேயெல்லாம் செலாவணித் தட்டுப்பாடு இல்லை, இங்கேதான் செலாவணித் தட்டுப்பாடு என்கிருர் மந்திரி. பம்பாய்க்கும் மத்திய சர்க்கார் டில்லிதான், சென்னைக்கும் டில்லிதானே! இங்கே மட்டும் ஏன் தட்டுப்பாடு?

மூடிய ஆலைகளைத் தூண்டமுடியாது என்கிருர். காரணம் கூடக் கேட்க முடியாதென்ருல் சர்க்கார்தான் எதற்கு? லைசென்சு முறைதான் ஏன் வேண்டும்? மந்திரிகள் பேசக்கூடிய பேச்சு அல்லவே இது? வெளிநாட்டுச் செய்திகளைப் பத்திரிகைகளில் படித்துவிட்டே திட்டவட்டமாகப் பேசும் காலத்தில் மந்திரிகள் இங்கே, பட்டும் படாமலும் பேசுகிருர்கள்.

அதோடு இருந்தாரா? கனம்? புதிய ஆலைகள் திறப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டும் அவை ஏன் திறக்கப்படவில்லை என பதை மந்திரி ஆராய நேரமில்லாததுபோல் பேசுகிருர். அப்படியானுல் எந்த அடிப்படையில் அனுமதி தரப்பட்டது? ஆலை வைக்க முற்பட்ட முதலாளிகள் எவ்வளவு நிலத்தை ஒதுக்கினுர்கள்? அவை அத்தனையும் தரிசு நிலங்களா, நன்செய் நிலங்களா? இந்த விபரங்களையெல்லாம் கனம் அமைச்சர் அவருக்கு இருக்கும் ஏராளமான ஓய்வு நேரங்களில் தேடிப்பிடித்து ஆராய்ந்தால் அனுமதி பெற்று திறக்கப்படாமல் கிடக்கும் ஆலைகளைத் திறக்க வழி பிறக்கும். பண்ணையார் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பவும், நிலப்பிரபு என்ற பட்டத்திலிருந்து தப்பிக்கவும் கரும்பாலைகளுக்கு நிலத்தை ஒதுக்கிவிட்டு 'குறட்டை' விட்டுக்கொண்டிருப்பார்கள்.

எந்தச் சட்டத்திலும் இடைவெளி தேடிப் பிடித்துப் பதுங்கிக் கொள்வது தானே பண முதலாளிகளின் குணம்! இது மந்திரிக்குப் புரியாமல் போக வழியில்லை. எல்லாம் அவருக்கு வெளிச்சம்!

தைமூரின் காதலி...

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

காவலாளியின் குரலே மாறிவிட்டது. அடுத்த கணம், காவலாளியிடம் அனுமதி பெற்று இஸ்தகார் குதிரை அரண்மனைக்குள் புகுந்தது.

இஸ்தகார் தகவல், நகர் காவலனையே தியாக்கியது என்ருல் தைமூரின் நிலை என்னுவது? பட்டினி கிடக்கும் சிங்கத்தைப் போல், நரநரவெனப் பல்லைக் கடித்துக்கொண்டிருந்த பாதுஷாவைப் பார்த்ததுமே இஸ்தகார் வீரன் குலைநடுங்கிப் போனுன்.

புருவத்தை அரை வட்டமாக்கி நிமிர்ந்து பார்த்தான் தைமூர்.

தரையைத் தொட்டு கண்ணில் ஒத்திக்கொண்டு, "ஆண்டவ, அபீப் இப்போது அவர்கள் பக்கம்...!" என்ருன் இஸ்தகார் மனிதன்.

மலை பிளந்ததுபோல், வானம் இடிந்ததுபோல், கடல் எழுந்ததுபோல் தைமூரின் கோபம் உருவெடுத்தது.

"என்னடா சொல்கிருய்?"

"ஆமாம் ஆண்டவரே! ஜஜியாவை நீக்கிவிட்டார். மதுபானத்தை அனுமதித்து விட்டார். மாதா கோயிலில் மணி அடிக்கவும் உத்தரவு தந்துவிட்டார்" என்ருன் வந்தவன்.

"எல்லாம் அபீபின் உத்தரவுகளா?"

"தங்கள் நாமத்தின் பெயராலேயேதான் ஹுஜூர்!"

தைமூர் இடது கரத்தினுல் மீசையை ஒதுக்கிக் கொண்டான்.

நீண்ட தாடியை ஒரு முறை மடித்து மூக்கில் வைத்தான். இடக் கண்ணின் அரைப்பகுதியை மூடிக்கொண்டே பேசினுன்.

"இஸ்தகார் முகமதியர்கள் என்னை என்ன செய்யச் சொல்கிருர்கள்."

"ஹுஜூர் எங்கள் தலைவர் நீங்கள்! நாங்கள் சாகட்டுமா ஆண்டவரே!"—கொஞ்சம் தெம்போடு பேசினுன் வந்தவன்.

"இ......ம்......இப்போது அபீப் எங்கே?"

"இஸ்தகார் கோட்டைக்குள் ஹுஜூர்! முகம்மதியப் படை கோட்டையை முற்றுகையிட்டிருக்கிறது."

"ஓஹோ! நான் போவதற்குள் அபீபை கொலையும் செய்துவிடுவார்களோ?"—என்று அலட்சியமாகச் சொன்னுன்.

"நிலைமை அப்படித்தானிருக்கிறது தேவா!"—என்ருன் இஸ்தகார் வீரன்.

★

மூன்ரும் நாள் காலை தைமூர் இஸ்தகார் போய்ச் சேர்ந்தான். முகமதியர்கள் இன்முகத்தோடு தங்கள் தலைவரை வரவேற்ருர்கள். கிறிஸ்துவர்கள் பயந்து கிறுகிறுத்துப் போயிருந்தார்கள். ஆனுல் அபீப் எதுபற்றியும் அக்கரை எடுத்துக்கொள்ளவில்லை. கிறிஸ்துவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க அவன் துடித்தான். அதற்காக, அவன் திருத்த நினைத்த தைமூரையே எதிர்க்கத் துணிவு கொண்டிருந்தான். ஆனுல் இஸ்தகாரில் யாரும் எதிர்பாராத வகையில் பாதுஷாவின் படை **வெள்ளைக் கொடி** ஏந்தி வந்தது. உலகத்தில் எந்த சர்வாதிகாரியின் சரித்திரத்திலும் நடந்திராத புதுமையாகப் பட்டது. ஆனுல் தைமூர் சர்வாதிகாரிகளுக்கெல்லாம் சர்வாதிகாரி! கோபத்தின் - மிருக உணர்ச்சியின் முனைமுகட்டில் தவம் செய்து கொண்டிருந்தவன். அவன் படை வெள்ளைக் கொடி ஏந்தி வந்தது. அவர்களுக்கு மத்தியில் பச்சைப் பட்டாடை பூண்டு கைதியைப்போல் வந்தான் தைமூர். அவனை வெறியன் என்ரேரும் இரக்கப்படும் வகையில், இருதயமற்றவன் தைமூர் என்று வசைபாடினேரும் துக்கப்படும் விதத்தில் சினைப்பசுவைப்போல் குதிரையில் ஊர்ந்து வந்தான் உலக மாவீரன்.

கோட்டைக் கதவுகள் திறந்துவிடப் பட்டன, கிறிஸ்துவச் சர்தார்கள் பின்தொடர அபீப் தைமூரை எதிர்கொண்டழைத்தான். அபீபின் அழகில் ஆயிரத்தில் ஒரு பங்கைக் கூடப் பெற்றிராத தைமூர், குதிரையை விட்டிறங்கி அபீபின் நெற்றியை முத்தமிட்டான். மயிலை காடி அணைத்தது. பருவத்தின் கொந்தளிப்பில் தத்தளித்த வாலிபர்களின் கண்வெட்டுக்களையெல்லாம் துச்சமென மதித்து வந்த உம்மதுல், அந்த நேரத்தில் அபீப் என்பதால், முரட்டு முகத்தின் மேடு பள்ளங்களையெல்லாம் தன் பட்டுக் கன்னத்தில் ஊராய விட்டாள். தைமூர் மிகச் சோகமாகத் தென்பட்டான். உலக இன்பதுன்டங்களையெல்லாம் மிகக் குறுகிய காலத்தில் கற்றுக்கொண்டவனைப்போல் இருபெரும் படைகளுக்கு மத்தியில் நின்று உருக்கமாகப் பேசினுன். அபீபோடுதான் பேசினுன். படை விரர்களுக்கு அவன் உரை நிகழ்த்தவில்லை. உலகமே அபீபின் வடிவில் வந்திருப்பதாக அல்லவா அவன் நினைத்தான்!

"மசூதியில் முல்லாக்கள் ஆண்டவனைத் தொழும்போது மாதா கோயிலில் மணியடிக்கக்கூடாது என்பதை தவறு என்று உணர்கிறேன். மணியோசையில் மதப் பகை இல்லைதான். மற்றவர் உரிமைகளைப் பறிப்பவன், பித்தலாட்டம் புரிபவன்தான் காபிர்—கடவுள் விரோதி! நதியின் வெள்ளி நீரோட்டத்தில், குயிலின் இனிய குரலில், மயிலின் ஒயில் மிகுந்த ஆட்டத்தில் ஆண்டவனைக் காண்பவன் மதவிரோதியல்லன். அபீப், நீ வந்ததிலிருந்து, என்னைச் சந்தித்ததிலிருந்து நான் அரண்மனைவாசியாகவே வாழ முடிவு செய்துவிட்டேன்.

இப்போது நான் சிங்கமல்ல. குகவாசி. அந்த நாட்களை - மனித ரத்தத்தை ஆருக நகரங்களுக்குள் பாய்ச்சிய நாட்களை - வயல்களையும் களஞ்சியங்களையும் சொக்கப்பனை கொளுத்தி மகிழ்ந்த நாட்களை இப்போது எண்ணிப்பார்க்க நான் அஞ்சுகிறேன். என்னுல் அழிக்கப்பட்ட சின்னங்களிடம் மன்னிப்புக் கேட்கத் துடிக்கிறேன். யாரிடம் கேட்பேன் அபீப்?"- கண்கலங்கச் சொன்னுன். அவன் பேசியதைக் காட்டிலும், அவன் கண்களிலே நீர் வழிந்ததைத்தான் விந்தையோடு பார்த்தது இஸ்தகார். படை அழுதது. நகர் அழுதது. ஆயுதங்கள் தரையில் படுத்தன. தைமூரும் அபீபும் அமைதியாகத் திரும்பினுர்கள். இதுவரை எதிரிகளாக இருந்தவர்கள் எல்லாம் பெருமூச்சோடு தைமூரின் முதுகுப் புறத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

★

சாமற்கண்டு நகரம் இன்பநாள் கொண்டாடியது. இஸ்தகாருக்கு விடுதலை கொடுத்துவிட்டு வந்த தைமூர் தனது தலைநகரத்தில் விழாக் கொண்டாடினுன். படை வீரர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பட்டன. தைமூர் அபீபை அழைத்து வரச் சொல்லி தன் அருகில் அமர வைத்தான். உண்மை வெளிப்பட்டுவிட்டதோ என்ற சந்தேகத்தில் அபீப் கொஞ்சம் தள்ளித் தள்ளி உட்கார்ந்தான். எத்தனையோ முறை அபீப், தைமூரோடு வாதிட்டிருக்கிருன், பக்கத்தில் அமர்ந்திருந்திருக்கிருன், அப்போதெல்லாம் ஏற்படாத நாணம், பெண்மையின் மென்மை அன்று அபீபுக்கு ஏற்பட்டது. கன்னங்கள் சிவந்தன. கண் பார்வையில் குறும்பு இருந்தது. தெளிந்த நீரோடையில் பாம்புகள் நெளிவதுபோல் அவனுடைய முகத்தில் அன்று பெண்மை வளைந்து வளைந்து சுற்றின.

"அபீப், இதுவரை நான் உன்னுடைய வாதங்களை ஒப்புக்கொண்டு வந்திருக்கிறேன். இப்போது உனக்கு ஒரு ஏற்பாடு செய்யப்போகிறேன். தட்டமாட்டாயே!"

"சொல்லுங்கள்! முடிவு சொல்லுகிறேன்!"

"நீ இப்படியே இருந்தால் என்ன அர்த்தம் அபீப்? திருமணம் வேண்டாமா?"

"அது...நினைத்தவுடன் செய்து விடக்கூடியதா பிரபு. பெண் கிடைக்கவேண்டும்; அந்தப் பெண் எனக்குப் பிடித்திருக்கவேண்டும்; எனக்குப் பிடித்தாலும் அவளுக்கு என்னைப் பிடித்திருக்கவேண்டும்!" -அபீப் இந்தப் பதிலைச் சொல்லும்போது கண்கலங்கியது. ஆனுலும் இளநகையை வரவழைத்துக் கொண்டாள். கொக்கைப்போல் கழுத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டே பேசினுள்.

"என்னைப் பார்! அபீப், அதற்கான ஏற்பாட்டை நான் செய்கிறேன்" என்று கூறி பக்கத்தில் நின்ற அபீபின் கரத்தைப் பற்றினுன் தைமூர்.

அபீப் தைமூரின் முகத்தையே கூர்மையாகப் பார்த்தாள். பாதுஷா பார்வையின் கொடூரத்தன்மை அபீபின் விழிநிலவின் எதிரே சரணடைந்துவிட்டது.

"பாதுஷா, நான் கன்னிப்பெண் என்று தெரிந்தால்......"எதிரே நிற்பது மதயானை போன்ற மனிதன் என்பதைக்கூட மறந்து உணர்ச்சி வயப்பட்டுப் புழுவாய் துடித்தான் அபீப்.

"அபீப், எல்லாம் எனக்குத் தெரியும்! ஷைநபூ சொன்னுள்!" என்ருன் தைமூர்.

"ஷைநபூ சொன்னுளா? அவளைத் தள்ளி வைத்துவிடவில்லையா தாங்கள்?"

"ஆம் கண்ணே! தள்ளிவைத்ததால், ஆள்மூலம் ஓலை அனுப்பியிருக்கிருள், நீ பெண்தான் என்றும், உன் பெயர் உம்மதுல் என்றும்."

"அவளுக்கு எப்படித் தெரியும்?"

"பெண்களுக்குத் தெரியாதா பெண்களை!

"என்மீது அக்காளுக்கு அவ்வளவு அன்பா?"

"எந்தப் பெண் தன் கணவனேடு இன்னெரு பெண்ணைப் பழகவிடுவாள்? தைமூரின் ராஜ்யத்தையே கவிழ்க்க வந்த சதிகாரி என்றல்லவா அவள் எழுதியிருக்கிருள்."

"பாவம் அக்காள்!"

"துஷ்ட மிருகத்தினிடம் அன்பு காட்டலாம்; கெட்ட பெண்களிடம் அன்பு காட்டுவது ஏமாளித்தனம்!... ..அபீப். நீ என்னை மனிதனுக்கிவிட்டாய்! என் வாழ்க்கையின் முற்பகுதியில் படிந்துள்ள ரத்தக்கறைகளை நீதான் மாற்ற வேண்டும்! மனித ஜாதியிடமிருந்து மன்னிப்பை எதிர்பார்க்கிறேன்."

"மாண்டு போனவர்கள் எப்படி மன்னிப்பார்கள் பிரபு?"

"இருக்கிறவர்கள் வாழ்த்தும் விதத்தில் நீ அரசுபுரிந்தால் போதும்!"

"அரசுபுரிவதா? அத்தனை பெரிய பளுவா? முடியுமா என்னுல்?"

"என்னையே தோற்கடித்தாய் இதைக் காட்டிலுமா ராஜ்ய பாரம் பெரிது?"

"நீங்கள் துணையிருந்தால் உலகம் எனக்குச் சிறிது தலைவரே!"

"நான் எங்கே போகப் போகிறேன். நான் தைமூர், நீ என் பேகம்! பெயர் **ஹமீதா**!"

"உம்மதுல்! அபீப்! இப்போது **ஹமீதா**!"

இருவரும் பலமாகச் சிரித்தார்கள். சாமற்கண்டு அரண்மனை அதிர்ந்தது.

சிங்கம் குகைக்குள் அடைப்பட்டது. மான்கள் ஓடி விளையாடின.

தைமூர் அவனது காலத்தில் கொடுமைகள் பல புரிந்திருந்தாலும் காலத்தால் அழியாத உலகக்கதையின் உன்னத ஜீவனுக வாழ்ந்து விட்டான். அவனுல் துன்பப்பட்டவர்களாலேயே இறுதிக்காலத்தில் புகழப்பட்டான். அவனை நினைக்கும்போது சீசர் வருகிருன்! நெப்போலியன் தோன்றுகிருன்! செங்கிஸ்கான் சிரிக்கிருன்! உலகத்தைக் கவர்ந்த அவர்கள் இப்போது எங்கெங்கோ கல்லறைக்குள் புதையுண்டு கிடக்கிருர்கள்! கோழைகளின் எலும்பைத் தின்னும் கறையான்கள்தான் மாவீரர்களின் சடலங்களையும் அரிக்கின்றன.

முற்றும்.

அழைப்பிதழ்

சமதர்ம இல்லம்,
முத்துப்பட்டணம்,
காரைக்குடி.
24-6-'57

பேரன்புடையீர்! வணக்கம்.

எங்கள் மகன் முத்துராமன் என்கிற ராஜாராம்மோகனுக்கும், கானுடுகாத்தான் திரு. வைசு. ச. சோலைமலை அவர்கள் மகள் இலக்குமி என்கிற கமலாவுக்கும் 8-7-'57ம் நாள் திங்கட்கிழமை காலை 10-30 மணிக்கு கானுடுகாத்தானில் நடைபெறும் திருமணத்திற்கு, தாங்கள் குடும்பத்தோடும், நண்பர்களோடும் வந்திருந்து விழாவினைச் சிறப்பித்துத்தர வேண்டுகிறேம்.

தங்களன்புள்ள,

இராம. சுப்பையா,
சுப. விசாலாட்சி.

சிரிப்புதான் வருகுதையா!

நமது திரைப்படங்கள் இப்போது ரொம்பதூரம் ‘முன்னேறிவிட்டன’! அதாவது புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்ந்துவிட்டன! உலகம் உருண்டையல்லவா? அந்தத் தத்துவத்தை எப்படி நிருபிப்பது? பள்ளிக்கூடத்தில் வாத்தியார் சொல்லுவார், ‘‘ஒரு ஆரஞ்சுப் பழத்தின்மீது எறும்பை விட்டால் அது எப்படி புறப்பட்ட இடத்திற்கே வந்துவிடுகிறதோ, அது போல் மனிதன் உலகைச் சுற்ற ஆரம்பித்தால் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேருவான். ஆகவே உலகம் உருண்டை’’ என்று! இதோ! மாய மந்திரங்களிலும் ‘டப்பாங்குத்’திலும் ஆரம்பமான தமிழ்த் திரை உலகம் பல ஆண்டுகளுக்குப் பிறகு புறப்பட்ட இடத்திற்கே வந்துவிட்டது! உலக தத்துவம் வாழ்க!

திடீரென்று மந்திரக்கோல் நீளுகிறது. ஆண் பெண்ணாகிறான்! யானை பூனையாகிறது! மனிதன், பாம்பாகிறான். கழுதை குதிரையாகிறது!- ஆனால் டைரக்டர் மிருகமாவதில்லை. அவர் மனிதராகவே இருக்கிறார்! மேடையிலே ‘போர்’ அடிக்கும் பேச்சாளனைக் கைதட்டி உட்கார வைப்பது போல்-மட்டமான நாடக நடிகனைப் பார்த்து ‘உள்ளே போ!’ என்று கத்துவதைப்போல், இப்போது மக்கள் இந்தக் காட்சிகளில் கைதட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். இது இங்கேயே நிற்க...

நமது சங்கீதமோ, மாடு மேய்க்கும் சிறுவனையும் ஒப்பாரி வைக்கும் பாட்டியையும் தேடிப் போய்விட்டது! மிருதங்கம், வயலின், வீணையெல்லாம்போய், தகரக்குவளை, செப்புக்குடம், மண்பானை, அரிசி அளக்கும் படி, ஆகியவை வாத்தியங்களாகிவிட்டன! இது புதுமை! பழமைக்கும் முன்னைப் பழமை புதுமையல்லவா? பாடல்கள்தான் என்ன! ‘பொம்மனாட்டிக்கு’ மோனை ‘கம்மனாட்டி’......ஜாலிலோ ஜிம்கானா......டோலிலோ கும்கானா...இன்னபிற!

நமது தயாரிப்பாளர்கள் அவ்வளவு மேதைகள்! பணம் எங்கே கிடந்தாலும் பொறுக்குவதைத்தான் அவர்கள் கலை என்று தோட்டம் போடுகிறார்கள். அது மலரிலே கிடந்தாலும் சரி, மலத்திலே கிடந்தாலும் சரி! நாடகத்திலே ஐம்பது வாரங்கள் ஓடிய கதையைப்படத்திலே நாலு நாளோடு விரட்டிவிட்ட நமது அரும்பெரும் டைரக்டர்களுக்கு இணை அவர்களேதான்! எழுத்தாளன், பாவம்! அவன் என்ன செய்வான்! வயிற்றை நிரப்பக் காசு தேவை—அது நமது ‘படுமூளை’த் தயாரிப்பாளர்களிடம்தான் இருக்கிறது! அவர்கள் இந்தச் சரக்குகளைத்தான் கேட்கிறார்கள்! ஏதோ ‘தத்தகா புத்தகா’ என்று படம் ஓடினால் சரி!

இந்தி டைரக்டர்களில் நூற்றுக்கு இரண்டு பேராவது தேறுகிறார்கள்! அவர்கள் சிறந்த மேதைகளாகவும் இருக்கிறார்கள்! சமீபத்தில் ‘**பியாசா**’ என்று ஒரு படம் பார்த்தேன். **குருதத்** என்பவர் நடித்து, டைரக்ட் செய்து, தயாரித்திருக்கிறார்! ஆகா! அவரைக் ‘‘கோவிலில் வைத்துக் கும்பிட வேண்டும்’’. ஒரு கவிஞன்; அவன் ஒருத்தியைக் காதலிக்கிறான்; அவளை வேறொருவனுக்குக் கட்டிக் கொடுத்துவிடுகிறார்கள்... அங்கே காவியமும் சோகமும் உருவாகின்றன. ஒரு வேசி அவனிடம் அன்பு செலுத்துகிறாள். அவனுக்காக ஓடுகிறாள். அவன் கவிதைகளை யாரும் சிந்தவில்லை! அவன் செத்துப் போனான் என்று செய்தி வந்ததும், கவிதைக்கு ஏக கிராக்கி! ‘சொந்தமில்லை’என்று தள்ளியவனெல்லாம், சொந்தக்காரனாக வருகிறான். ‘‘இது கவிதையா’’ என்று குப்பைத் தொட்டியில் போட்டவனெல்லாம் ‘‘ஆகா! இதல்லவா கவிதை’’ என்கிறான். ‘‘எங்கள் விஜய் பாபு’’ என்று சொந்தம் கொண்டாடுகிறான். அவனுக்கு சிலையும் மண்டபமும் ஆக்கி, திறப்பு விழாக் கொண்டாடுகிறார்கள்! இவ்வளவையும் அவன் உயிரோடு இருந்து பார்த்துக்கொண்டிருக்கிறான்! ஒவ்வொரு அடி படமும் உயிரோடு ஓடுகிறது! நமது டைரக்டர்களிடம் இதை விட்டிருந்தால்.........

கவிஞனும் தாசியும், ‘பாக்க வாங்க பம்மாத்தே!’ டான்ஸு ஆடுவார்கள்!

கவிஞனைப் பார்த்து வில்லன் மீசையில் கைபோடுவான்...ஒரு கம்புச் சண்டை, மல் யுத்தம்...‘ஆள் கவிஞனாயிற்றே’ என்று யாரும் கேட்கக் கூடாது! ‘கம்புச் சண்டைக் கவிஞன்’ என்று வைத்துக் கொள்ள வேண்டும். கவிஞனைக் காப்பாற்ற சரசுவதி கருணைக்கிழங்கு விற்பாள்! லட்சுமி உருளைக்கிழங்கு விற்பாள்! பிரம்மா முட்டைக் கோஸ் விற்பார்! பரமசிவன் சமைத்துக் கொண்டு வந்து போடுவார்! கடைசியாக, கவிஞனை ‘வில்லன்’ கொன்று விடுவான்! தமிழ் டைரக்டர்கள் அவ்வளவு தனித்தன்மை வாய்ந்தவர்கள்!

பியாசாவில் ஒரு தாசித் தெரு. பம்பாயின் அவல வாழ்வை அப்படியே காட்டுகிறார் டைரக்டர். கவிஞன் ஒரு அருமையான கவிதையைப் பாடிக்கொண்டு அந்தப் பக்கம்வருகிறான். பாட்டு ஆறு நிமிடங்கள் ஓடுகிறது! சலிக்கிறதா? இன்னும் இல்லையே என்று தோன்றுகிறது!

ஒரு நாட்டியக்காரி குடிகாரர்களுக்கு மத்தியில் ஆடுகிறாள். அவள் குழந்தை அழுகிறது. துடிக்கிறாள். விடமாட்டேன் என்கிறார்கள்! வயிற்றுப் பிழைப்புக்குத் தொழில் செய்தாலும் அவள் ‘தாய்’ என்பதை அவ்வளவு உருக்கமாகக் காட்டுகிறார், டைரக்டர்!

கவிஞன் செத்துவிட்டதாகச் செய்தி. சிலை திறப்பு விழாவிற்குக் கூட்டம் தாங்கமுடியவில்லை. டிராமில் கவிஞனும் வருகிறான். கவிஞனைத் தள்ளிவிட்டுத் திறப்பு விழாவிற்கு எல்லோரும் ஓடுகிறார்கள்! உயிரின் மீது காலை வைத்துக் கல்லுக்கு மாலை போடும் மக்களை, இந்தக் காட்சியைத் தவிர வேறு எந்த அமைப்பு உருக்கமாகக் காட்ட முடியும்!

இதையெல்லாம் பார்க்கும் போதும் சில ஆங்கிலப் படங்களைப் பார்க்கும்போதும்—பிறகு தமிழ்ப் படங்களைப் பார்க்கும் போதும் கவிஞன் தமிழனாகப் பிறந்ததற்குவெட்கப்படுகிறேன். சும்மா, கலதோன்றி மண்தோன்றாக் காலத்தையும், கடற் படை கொண்டு இலங்கை வென்ற கதையையும் சொல்லிச் சொல்லி சலித்துப் போய் விட்டது. தமிழனுடைய சரித்திரமும் கலையும் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னாலேயே முடிந்துவிட்டன. இப்போது தரித்திரமும் ‘கொலை’யும் தான் தமிழ் நாட்டின் இரு கண்கள்!

இந்த நிலை எப்போது மாறுமோ? நினைத்தாலே உடம்பு எரிகிறது!

அட தமிழுலகமே; நீ உருப்படாவிட்டாலும் உன்கலையாவது உருப்படுமா?....

—வணங்காமுடி

சட்டமன்றத்தில் எஸ். ஏ. பி. பிரச்சினை

கழக உறுப்பினர்கள் கேள்விகள் எழுப்பினர்

ஜூலை 2-ம் தேதியன்று எஸ். ஏ. பி. படை பற்றி க. அன்பழகன், எம். பி. சுப்ரமணியம் ஆகிய இருவரும் சட்டசபையில் கேள்விகள் எழுப்பினார்கள்.

‘‘பாதுகாப்பு அடிப்படையில் புழலேரி அருகில் ஆயுதம் தாங்கிய போலீஸ் இல்லை; ஆகவே அவர்களுக்கு ‘படி’ச் செலவு தரப்படுகிறதா என்ற கேள்வி எழவில்லை; சாதாரணமாக நகரத்தில் அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 12 அணா மட்டுமே ‘படி’ செலவாகத் தரப்படுகிறது’’ என்று போலீஸ் அமைச்சர் பக்தவத்சலம் பதில் சொன்னார்.

எம். பி. சுப்பிரமணியம் : ஆயுதம் தாங்கிய போலீஸ் படையில் உள்ளவர்கள், அவர்களுடைய உழைப்புக் காலத்திற்குப் பிறகு சாதாரண போலீஸ் படையில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்களா?

அமைச்சர் : அவகாசம் வேண்டும்.

க. அன்பழகன் : ஆயுதம் தாங்கிய போலீஸ் படையில் உள்ளவர்கள் குடியிருப்புப் போன்ற வசதிகள் பற்றி புகார் செய்வதை அரசாங்கம் அறியுமா? அறிந்திருந்தால், அது பற்றி என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது?

அமைச்சர் : ஆயுதம் தாங்கிய போலீஸ் படையினர், குடியிருப்பு பற்றி குறைபட்டுக்கொண்டதாகவோ, மனுச் செய்துகொண்டதாகவோ தெரியவில்லை; அவர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும் செய்யவும் அரசாங்கம் கருதியுள்ளது.

வாங்கிப் பாருங்கள்!

திரீ ரோஸ் பிராண்ட் டீ

★ சுவை மிகுந்தது

★ சுகம் தருவது

★ சுறுசுறுப்புக் கொடுப்பது

மணமுண்டு! குணமுண்டு!

கனீஸ் டீ ஸ்டோர்

776, ராஜகோபாலசாமி தெரு,

தஞ்சாவூர்.

H. O. திருவனந்தபுரம் : : S. O. சென்னை.

ADVT.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.